**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**முன்னிலை– திருமதி.சு.ஆனந்தவல்லி, B.A., B.L.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் நாள் திங்கட்கிழமை

**வழக்கிடை மனு எண் 15/2024**

உள்

**அசல் வழக்கு எண் 196/2016**

**–––––––**

1. லேட்.ராஜலட்சுமி
2. சுந்தரராஜன்
3. யோகேஸ்வரன் ....மனுதாரர்கள்/வாதிகள்.

(2 ம் வாதியின் பவர் ஏஜெண்டான சித்ரா என்பவர் கடந்த 04.05.2025 ம் தேதியில் இறந்துவிட்டார். இ.ம.எண்.17/2025 மனுவில் கடந்த 10.10.2025 ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி சீர்திருத்தம் செய்யப்பட்டது. கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது)

–எதிர்–

1. டி.மல்லையன் (இறப்பு)
2. எம்.சுந்தரமகாலிங்கம்
3. தமிழ்நாடு அரசு அதன் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விருதுநகர் மூலம்
4. வருவாய் வட்டாட்சியர் அவர்கள், அருப்புக்கோட்டை
5. குல்லூர்சந்தை ஊராட்சி மன்றம், அதன் தனி அலுவலர் மூலம்
6. லேட்.பாக்கியவதி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.

இம்மனுவானது கடந்த 14–08–2024 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 16–10–2025 ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T.ராஜாதேசிங் அவர்கள் முன்னிலையாகியும், 1,6 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் இறந்துவிட்டநிலையிலும், 2 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சோலைராஜ் அவர்கள்

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முன்னிலையாகியும், 26.09.2024ம் தேதி 3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி மறுப்புரை தாக்கல் செய்யப்படவில்லை, இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

<u>உத்தரவு</u>

இவ்வழக்கில் தாவாச்சொத்தை மாவட்ட சர்வேயர் வைத்து அளவை செய்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிமன்ற ஆணையருக்கு வாரண்டை திரும்ப அளித்து தகுந்த உத்தரவுகள் ஏற்படுத்தி நீதி வழங்கி உத்தரவிட வேண்டி இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 26 விதி 9,10 மற்றும் பிரிவு 151-ன் படி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல்.

2. **<u>2ம்வாதியின் பவர் ஏஜண்டு சித்ரா என்பவரால் மனு அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு அவரது இறப்பிற்கு பின் 2ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட Supporting அபிடவிட் மற்றும் மனுவின் சுருக்கம்</u>:**

(1) தாவா 1 வது லக்க சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரியும், பின் விளைவாக நிரந்தர உறுத்துக் கட்டளை கோரியும், தாவா 2வதுலக்க சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட நடைபாதை என்று விளம்புகை செய்யக் கோரியும், 2வதுலக்க நடைபாதையில் 1,2 பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இடைமனு எண்.1777/2016 மனு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் 10-12-2016ம் தேதியில் தாவாச் சொத்துக்களை நேரிடையாக பார்வையிட்டு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்து இருக்கின்றார். அதில் வாதியின் வீட்டிற்கு கிழக்கே வடபுறம் கிழமேல் 5 அடியும், தென்புறம் கிழமேல் 9 அடியும் இடமுள்ளது என்று தெளிவாக காட்டி இருக்கின்றார். இந்த வழக்கு வாதிகள் அரசு சொத்தில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. இதற்கிடையில் கடந்த 20-04-2022ம் தேதியில் வாதிகள் தாவா பொது பாதையில் சோள நாத்து மற்றும் வாழை பயிரிட்டுள்ளதாக அருப்புக்கோட்டை வருவாய்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

வட்டாட்சியர் மோசடியாக அறிவிப்பு செய்து இருக்கின்றார். பின்னர் 22.04.2024ம் தேதியில் பொது பாதையில் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி இருப்பதாக அறிவிப்பு அனுப்பி உள்ளார்.

(2) மேலும் சென்ற வாரத்தில் சர்வேயர் வாதியின் வீட்டை அளவை செய்து வாதியின் வீடு சுமார் 5 அடி அளவில் பொது பாதையில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும், அதை இடிக்கப் போவதாகவும் கூறி சென்றுள்ளார். அவ்வாறு வருவாய் துறையினர் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்படுவதில் அது தவறு என்றும், வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்து வாதிகள் வருவாய் வட்டாட்சியருக்கு பதில் அனுப்பி உள்ளார்கள். ஆனால் அதை பொருட்படுத்தாது வருவாய் துறையினர் வாதிகளின் வீட்டை இடிக்க தீவிரமாக செயல்பட்டு வருகின்றார்கள். மேலே கண்ட சூழ்நிலைகளில் வாதிகளின் வீடு அதை சுற்றியுள்ள காலியிடம் மற்றும் வாதிகளின் காலியிடத்திற்கும் வீட்டிற்கும் கிழக்கே உள்ள தெருவினை சர்வே செய்ய வேண்டியது அவசியமாக இருக்கின்றது. எனவே தாவாச் சொத்தை மாவட்ட சர்வேயர் (Assistant Director of Survey) வைத்து அளவை செய்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிமன்ற ஆணையருக்கு வாரண்டை திரும்ப அளித்து தகுந்த உத்தரவுகள் ஏற்படுத்தி நீதி வழங்க வேண்டியதாக உள்ளது.

3. **<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மறுப்புரையின் சுருக்கம்</u>**

இந்த மனுதாரரே தன்னுடைய அபிடவிட்டு பாரா 1ல் நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த அறிக்கையில் வாதியின் வீட்டிற்கு கிழக்கே வடபுறம் கிழமேல் 5 அடியும், தென்புறம் கிழமேல் 9 அடியும், இடமுள்ளது என்று தெளிவாக காட்டியிருக்கிறார் என்று கூறிவிட்டு என்ன காரணத்திற்காக திரும்பவும் மாவட்ட சர்வேயர் அவர்களை வைத்து அளக்க வேண்டும் என்ற காரணம் எதுவும் அபிடவிட்டில் இல்லை. வட்டாட்சியர் ஆக்கிரமிப்பு உள்ளதாக வாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி இருந்தால் இந்த வழக்கில் அவர்களை சேர்த்து மனுதார் பரிகாரம் கேட்கலாமே ஒழிய அந்த காரணத்திற்காக மீண்டும் தாவா இடத்தை ஆணையர் பார்வையிட வேண்டும் என்ற எந்த அவசியமும்

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

இல்லை. ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் வாதிகள் வீடு, அதனை சுற்றியுள்ள காலியிடம் மற்றும் தெரு ஆகிய அனைத்தும் அளந்து காண்பிக்கப்பட்டுள்ளது. தற்போது சாட்சி விசாரணை எல்லாம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மீண்டும் ஆணையர் நியமனம் கோருவது சட்ட சம்மதமற்றது. மனு வீணானது. அலைக்கழிவானது. மனுவில் எந்தவித நல்லெண்ணமும் இல்லை. ஆகையால் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாயும்,நியாயமாயும் இருக்கிறது.

26.09.2024ம் தேதி 3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி மறுப்புரை தாக்கல் செய்யப்படவில்லை.

4. <u>தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை</u>

மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

<u>தீர்வு</u>

(5) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. தாவாச்சொத்தை மாவட்ட சர்வேயர் அளவை செய்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் காரணங்களாக தாவா பொதுப்பாதையில் வாதிகள் சோளநாத்து மற்றும் வாழை பயிரிட்டுள்ளதாக அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் 20.04.2022ம் தேதி அறிவிப்பு செய்துள்ளார் என்றும், மேற்படி பொதுப்பாதையினை வாதிகள் ஆக்கிரமித்து வீடுகட்டியிருப்பதாக 22.04.2024ம் தேதியில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் வருவாய் வட்டாட்சியர் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வாதிகளின் வீட்டை இடிக்க செயல்பட்டு வருகிறார்கள் என்றும், அதனால் வாதிகளின் வீடு அதனை சுற்றியுள்ள காலியிடம் மற்றும் காலியிடத்திற்கும் வீட்டிற்கும் கிழக்கே உள்ள தெருவினை சர்வே செய்வது அவசியமாய் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. அசல்

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

வழக்கானது 1வது லக்கச்சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை கோரியும், பின்விளைவாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 2வது லக்கச்சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட நடைபாதை என விளம்புகை செய்யக்கோரியும், 1,2 பிரதிவாதிகள் நடைபாதையில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(6) தாவாச்சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய இ.ம.எண்.1777/2016 மனுதாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையர் தாவாச்சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். 15.12.2016ம் தேதி நீதிமன்ற ஆணையர் திரு.முருகன் அவர்களால் முதல்நிலை ஆணையர் அறிக்கையும், 17.03.2021ல் ஆணையர் திரு.பாலமுருகன் என்பவரால் இறுதிநிலை ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடங்கள் நீ.ம.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு மனுதாரர்/வாதி தரப்பில் எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. இம்மனுவில் ஆணையர் பார்வையிட்டு வாதியின் வீட்டிற்கு கிழக்கே வடபுறம் கிழமேல் 5 அடியும், தென்புறம் கிழமேல் 9 அடியும் இடமுள்ளது என தெளிவாக காட்டியிருக்கின்றார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை ஒப்புக்கொண்டதால் மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் இதுநாள்வரை தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது. அசல் வழக்கானது வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்வதற்காக சுமார் 9 வருடங்களாக நிலுவையில் இருந்து வருகிறது.

(7) மனுதாரர் தரப்பில் 4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வருவாய் வட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பும் அதற்கு மனுதாரர் கொடுத்த பதில் அறிவிப்பும் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 20.04.2022ல் வருவாய் வட்டாட்சியர் அறிவிப்பு அனுப்பி உள்ளார். அந்த அறிவிப்பிற்கு இரண்டு

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

வருடம் கழித்து மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மற்றொரு அறிவிப்பு 22.04.2024 ம் தேதி அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு அறிவிப்புகளும் சர்வே எண்.68/3x ல் உள்ள பொதுப்பாதையை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லி அனுப்பப்பட்டுள்ளது. பிராது சொத்து விபரத்தில் 1 வது லக்க சொத்து சர்வே எண். 68/3v வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது. 2 வது லக்க சொத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை. பொதுப்பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த சர்வே எண்ணில் பொதுப்பாதை உள்ளது என்று சொத்துவிபரத்தில் குறிப்பிடவில்லை. 2 வது இலக்க சொத்து பொதுப்பாதையா இல்லையா என்று வழக்கின் விசாரணை முடிவில் தீர்வு காணப்படவேண்டியது.

(8) இரண்டு நீதிமன்ற ஆணையர்கள் தாவா சொத்தையும், வாதி, பிரதிவாதி இடத்தையும் அளந்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துவிட்டனர். அந்த அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் இல்லை. அந்த அறிக்கையை நீக்கறவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ததில் என்ன குறைபாடு உள்ளது என்று குறிப்பிடாமல் மீண்டும் அளக்க கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய தாவா சொத்தும், வாதி, பிரதிவாதிகள் வீடுகளும் அளவீடு செய்யப்பட்டுவிட்டது. மேற்படி அறிக்கைக்கு எவ்வித ஆட்சேபணையும் மனுதாரர் தெரிவிக்காமல் இருந்துவிட்டு 2022 ல் வட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு இரண்டு வருடங்கள் கழித்து அனுப்பிவிட்டு வா.சா.1 ஐ குறுக்குவிசாணை செய்ய வழக்கு நிலுவையில் இருக்கும்நிலையில் காலம் கடந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளது அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(9) இரண்டு நீதிமன்ற ஆணையர்கள் மூலம் தாவா சொத்தும் வாதி, பிரதிவாதி சொத்தும் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்து அதனை நீக்கறவு செய்யாது ஆட்சேபணை செய்யாது அளவுகள் சரியாக உள்ளது என இந்த மனுவிலே ஒப்புக்கொண்டுவிட்டு பிராது சொத்துவிபரத்தில் குறிப்பிடாத சர்வே எண்.68/3x என்பதை Ex.P1,P2 அனுப்பப்பட்டதால் மீண்டும் அளவீடு செய்ய வேண்டுமென கேட்டு

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேற்படி உத்தரவு என்னால் சொல்லப்பட்டு. சுருக்கெழுத்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம்நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
அருப்புக்கோட்டை.

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணம்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.04.2022 | வருவாய் வட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பு ஜெராக்ஸ் |
| ம.சா.ஆ.2 | 22.04.2024 | வருவாய் வட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பு ஜெராக்ஸ் |
| ம.சா.ஆ.3 | 28.04.2024 | வருவாய் வட்டாட்சியர் அனுப்பிய பதில் அறிவிப்பு ஜெராக்ஸ் |
| ம.சா.ஆ.4 | 28.07.2024 | வருவாய் வட்டாட்சியர் அனுப்பிய பதில் அறிவிப்பு ஜெராக்ஸ் |

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள்:** **இல்லை**

**2ம்எதிர்மனுதாரர்/2ம்பிரதிவாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:** **இல்லை**

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
அருப்புக்கோட்டை.